வாழை நாரிலிருந்து கயிறு தயாரிப்பு

* 323 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாழை நாரைக் கொண்டு கயிறுகள், பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆ. பாந்தாமன் : தலைவரவர்களே, இந்த வாழைப்பட்டையைப் பயன் படுத்தி பிற மாநிலங்களில் கயிறுகளைத் தயாரிக்கிறார்கள். அதைப்போலவே நமது மாநில அரசும் ஒரு தொழிற்சாலையை உருவாக்கி கயிறுகளைத் தயாரிப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காதி இலாக்காவில் இப்படிப்பட்ட ஒரு யூனிட் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, காஞ்சிபுரம் பட்டுச் சேலையை உடுத்த முடியாத நிலையில் பலர் இருக்கிறார்கள். ஆகவே இந்த வாழை நார்ப் பட்டிலிருந்தாவது சேலைகளைத் தயாரித்து விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வாழை நாரில் கயிறு திரிப்பதைப் பற்றியது, சேலையைப் பற்றியது அல்ல.

Prices of commodities in Super-markets

* 324 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have undertaken a study on the impact on prices of commodities by the opening of Super-markets; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, புள்ளிவிவரத் தொகுப்பாளர் (Statistician) கொடுத்த ஆய்வுரைகளின்படி கடலூர், தஞ்சை, வேலூர், கோவை நகரங்களிலுள்ள சிறப்பங்காடிகளை நேரில் சென்று பார்த்து ஆராய்ந்து, சிறப்பங்காடிகளில் தனியார் கடைகளைவிட குறைந்த விலையில் பண்டங்கள் விற்கப்படுகின்றன என்று அறிவித்துள்ளார்.